நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.

**பிரிவு 313(1)(ஆ) CrPC –இன் படியான விசாரணை**

எதிரி: பழனிச்சாமி

| | | | |
|---|---|---|---|
| 1. | கேள்வி | : | அ.சா.1 – ராஜேஷ்வரி, அவருடைய சாட்சியத்தில், 21.04.2022 ம் தேதி மாலை நேரத்தில் அவரது வீட்டில் இருந்த போது எதிரியாகிய (அ.சா.1 ன் கணவர்) நீங்கள் குடித்துவிட்டு வந்து அவரிடம் குடிப்பதற்கு பணம் கேட்டதாகவும், அவரிடம் பணம் இல்லாததால் அவர் கொடுக்கவில்லை என்றும், எதிரியாகிய நீங்கள் அ.சா.1 ன் தலைமுடியை பிடித்து கையால் குத்தியதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | ராஜேஸ்வரி என்னுடைய மனைவிதான். நான் பத்து நபர்களை வைத்து வேலை செய்கிறேன், ஆகையால் அவரிடம் காசு கேட்க வேண்டிய அவசியம் இல்லை. |
| 2 | கேள்வி | : | அ.சா.1 – ராஜேஷ்வரி, அவருடைய சாட்சியத்தில், மேற்படி சம்பவத்தை தட்டிகேட்க வந்த அ.சா.1 ன் சித்தப்பா அ.சா.2 திருமலைக்குமரனையும், அ.சா.1 ன் தம்பி அ.சா.3 – சரவணக்குமாரையும், அ.சா.1 ஐயும் பார்த்து, "மயித்த புடுங்க எங்க வீட்டுக்கு வர்ற என்று திட்டியதாகவும், அ.சா.1 ஐ பார்த்து தெருவில் வைத்து தேவிடியாக கூதி மகளே, பலவட்ர கூதி மகளே துட்டு குடுடீ தேவிடியா" என்று திட்டியதாகவும், அ.சா.1 ன் சித்தாப்பா அ.சா.2 திருமலைக்குமரனை பார்த்து "ஒக்க புண்டை எதுக்குடா என் வீட்டுக்கு வர்ற" என்று கூறியதாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | அவர்கள் என் வீட்டிற்கு வரவும் இல்லை, அவர்கள் கூறுவது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை. |
| 3 | கேள்வி | : | அ.சா.2 – திருமலைகுமரன் மற்றும் அ.சா.3 – சரவணக்குமார், அவர்களுடைய சாட்சியத்தில், 21.04.2022 ஆம் தேதி எதிரியாகிய நீங்கள் மதுபோதையில் வந்து அ.சா.1 ராஜேஸ்வரியை தலைமுடியை பிடித்து அடித்ததாகவும், அ.சா.2 – திருமலைகுமரன் மற்றும் அ.சா.3 – சரவணக்குமார் ஆகியோர் சம்பவ இடத்திற்கு செல்லவும் அருகில் உள்ளவர்களும் வந்து விட்டதாகவும், அ.சா.1 – ராஜேஸ்வரி மேலும் அங்கு இருக்க வைத்தால் ஏதாவது பிரச்சனை ஆகிவிடும் என்று கூறி அவர்களுடைய வீட்டிற்கு அழைத்து வந்து விட்டதாகவும், அன்றைய தினம் இரவு எதிரியாகிய நீங்கள் அவர்கள் அனைவரையும் வெட்டி விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும் சாட்சிமளித்துள்ளார்கள். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | என்னுடைய வீட்டில் இருந்து ராஜேஸ்வரியை அழைத்துச் செல்லவில்லை, பட்டாசு தொழிற்சாலைக்கு வேலைக்கு சென்றவரை தான் வீட்டிற்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். சரவணகுமார் என்னிடம் ரூபாய் 2,60,000 கடன் வாங்கி உள்ளார், அந்த தொகையை கேட்டதற்கு தான் என் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். |

| | | | |
|---|---|---|---|
| 4 | கேள்வி | : | மேற்படி 3 சாட்சிகளும் மேலும் அவர்களுடைய சாட்சியத்தில் மேற்படி சம்பவம் தொடர்பாக அ.சா.1–ராஜேஸ்வரி புகார் மனு (அ.சா.ஆ.1) அளித்ததாக சாட்சிமளித்துள்ளார்கள். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | ராஜேஸ்வரி என் மீது புகார் கொடுக்கவில்லை, திருமலை குமரனும் சரவணகுமாரும் தான் காவல் நிலையத்திற்கு சென்று என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள். |
| 5 | கேள்வி | : | அ.சா.4 – பழனிச்சாமி அவருடைய சாட்சியத்தில், 22.04.2022 ம் தேதி பகல் 11.30 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சாஆ.2) மற்றும் வரைபடம் தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் போலீசார் அங்கு வரவில்லை. |
| 6 | கேள்வி | | அ.சா.5 – திரு.வேலுச்சாமி உதவி ஆய்வாளர் அவருடைய சாட்சியத்தில், 22.04.2022–ம் தேதி 10.45 மணிக்கு வெம்பக்கோட்டை காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது, அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 141/2022 இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294 (பி), 323 மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3)பதிவு செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | ராஜேஸ்வரி என் மீது புகார் கொடுக்கவில்லை, திருமலை குமரனும் சரவணகுமாரும் தான் காவல் நிலையத்திற்கு சென்று என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள். |
| 7 | கேள்வி | : | அ.சா.5 – திரு.வேலுச்சாமி உதவி ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில்,அன்றே பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் காளிமுத்து மற்றும் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பா்ரவை மகஜர் தயார் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | : | சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் போலீசார் அங்கு வரவில்லை. திருமலை குமரனின் மகள் சாத்தூர் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறார், அவருடைய அழுத்தத்தின் பேரில்தான் உதவி ஆய்வாளர் வேலுச்சாமி இந்த வழக்கை பதிவு செய்தார். |
| 8 | கேள்வி | | அ.சா.5 – திரு.வேலுச்சாமி உதவி ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், சாட்சிகள் ராஜேஸ்வரி, செல்வன் கணேஷ் குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்ததாகவும், 23.04.2022 ஆம் தேதி சாட்சிகள் திருமலைகுமரன் மற்றும் சரவணகுமார் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | ஊருக்கு வந்து சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை. |
| 9 | கேள்வி | | அ.சா.5 – திரு.வேலுச்சாமி உதவி ஆய்வாளர் மேலும் அவருடைய சாட்சியத்தில், இவ்வழக்கில் அ.சா.1 ராஜேஸ்வரிக்கு காயம் இல்லை என்பதாலும், அவர் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்பதாலும் வழக்கின் சட்டப்பிரிவை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294 (பி), 323, மற்றும் பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்திலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | | | இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294 பி, 352 மற்றும் பிரிவு நான்கு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றங்களாக மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்ததாகவும், அதே குற்றங்களுக்கு எதிரி மீது இறுதி அறிக்கையை (அ.சா.ஆ.5) தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இது குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்? |
| | பதில் | | அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. |
| 10 | கேள்வி | | வழக்கு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்? |
| | பதில் | : | இல்லை |
| 11 | கேள்வி | : | உங்கள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | உண்டு |

கேள்விகள் என்னால் நேரடியாக எதிரிகளிடம் கேட்கப்பட்டு, அவர்கள் கூறிய பதில் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர், எண்.2,
சாத்தூர்